# தமிழ் வளர்ச்சிக்கு சைவ நூலில் ஒன்றான திருமந்திரத்தின் பங்களிப்பு

ந.செ.கீதாஞ்சலி & : திரு. வீ. கோபிநாத்
உளவியல் துறை , பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை
மின்னஞ்சல் : 23mpy012@psgrkcw.ac.in , gobinath@psgrkcw.ac.in

19

**ஆய்வுச் சுருக்கம்**

அறம் பொருள் இன்பம் என பேசிய நூல்களுக்கு இடையே வீடுபேற்றை மையப்படுத்தியே நூல் அமைக்கப்பட்டுள்ளது.அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் வீடுபேறுக்கு உதவும் துணைக் கருவிகளாக கையாண்டிருக்கிறார் திருமூலர் என்பது கவனிக்கத்தக்கது.

**ஆய்வு நோக்கம்**

மொழியின் சிறப்பு என்பது அம்மொழியில் தோன்றும் நூல்களில் மேன்மை அடைகிறது. இவ்வகையில் செம்மொழியான தமிழ் மொழியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வின் தத்துவம்,உடல்நலம்,மனவளம் உயிர்நோக்கம்,சமூககட்டமைப்பு,ஆட்சி முறை,கரு உற்பத்தி எனபுதிய புதிய கருத்துக்கள் தமிழில் சொல்லப்பட்டுள்ளது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திருமந்திரத்தால் தமிழ் எவ்வாறு வளம்பெற்றது என்பதை இங்கு காண்போம்.

**கடவுச்சொற்கள்**: சைவ சமயம், ஞானம், திருமந்திரம், தமிழ் வளர்ச்சி, திருமூலர்.

**முன்னுரை**:

**சமயங்கள்**

இந்திய கலாச்சாரத்தின் அடித்தளத்தை உருவாக்குகின்றன. அவை பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், மனப்பக்குவம் மற்றும் ஆன்மீகப் புரிதலை தீர்மானிக்கின்றன. அவை நல்லதையும் கெட்டதையும் வேறுபடுத்தி வழிநடத்துகின்றன. சமயங்கள் மக்களுக்கு அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைவிட வீடுபேறே அவசியமானது என்று வலியுறுத்துகின்றன. தமிழறிஞர்கள் 'சமயம்' என்ற சொல் 'சமை' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிடுகின்றனர். சமயம் ஒழுக்கத்தை விதைத்து அன்பு, அமைதி, கட்டுப்பாட்டு உணர்வை ஊக்குவிக்கின்றது. மிக முக்கியமாக, தனிநபர்கள் தங்கள் மனிதாபிமானத்தைத் தழுவிக் கொள்ள இது அதிகாரம் அளிக்கின்றது. அன்பைப் பரப்பி உயிர்களைப் பாதுகாப்பதன் மூலமும், உலகை வளர்ப்பதன் மூலமும் அது வெளிப்படுகின்றது. சமய சடங்குகள் தனிநபர்களின் கலை உணர்வுகளை வடிவமைக்கின்றன.

**சைவ சமயம்**

உலகில் பழமையான சமயங்களில் ஒன்று. இந்து சமயத்தின் முதன்மையான பிரிவாக சிவனை வழிபடு தெய்வமாகக் கொண்டது இச்சமய முறை. ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையான சிந்து சமவெளியில் சிவ வழிபாடான பசுபதி வழிபாடும் லிங்க வழிபாடும் காணப்பட்டன. இதன் பின் வந்த ஆரியர்களும் சிவ வழிபாடான சிவனை வழிபட்டனர்.

சைவ சமயம் பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியான பழமை வாய்ந்த இயற்கை வழிபாட்டு முறை என்பதை அறிந்து, அது தமிழர்களின் சமய நெறியாகப் பல காலம் திகழ்ந்து வந்தது.ஆலமர் செல்வன், முக்கட் செல்வன், கறைமிடற்று அண்ணல் என்ற பெயர்களில் சிவனைத் தமிழர்கள் வழிபட்டனர். முருகக் கடவுளையும் கொற்றவையையும் இணைந்த சமய வழிபாட்டு முறையாக இது திகழ்ந்தது.இக்காலத்தில் சைவச் சமயம் முழுமையாக உருவாகவும் சமய நூல்கள் தோன்றவுமில்லை. சைவச் சமயம் கி.பி 7 ஆம் நூற்றாண்டளவில் முழுவடிவம் பெற்றது. இதற்கு திருமூலர் மூலகாரணமாக அமைந்தார்.

முதன் முதலாய் யோக முறையைத் தமிழருக்கு அறிமுகம் செய்து வைத்தார் **திருமூலர்**.அவர் உருவாக்கிய படைப்பான **திருமந்திரம்** என்ற நூல் சைவச் சமயக் கோட்பாடுகளும் கொள்கைகளும் கொண்ட நூலாகவும் சைவச் சமய வேதமாகவும் திகழ்ந்தது. இந்நூலின் மூலமாகத் தமிழகத்திற்குச் சன்மார்க்கச் சைவச் சமயநெறியை அவர் வகுத்தளித்தார். இதன் சிறப்பு காரணமாய்ப் பின்வந்த பல்வேறு சமயப் பெரியார்களுக்கு அந்நூல் வழிகாட்டியாய் அமைந்தது. திருமூலர் தமிழ் வளர்ச்சிக்கு அருளிச் செய்த சைவச் சமய மார்க்க நெறியை திருமந்திரம் மூலம் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சைவ சமயமும் தமிழும்**

சைவ சமயம் உலகில் தோன்றிய முதற்சமயம் ஆகும்.சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுகிற சமயம் சைவமாகும்.

**"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும்**
**இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும்**
**இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி**
**மின்னும் தவளச் சடைமுடித் தாமரை யானே!"**

இச்சமயத்தைப் பின்பற்றுவோர் சைவர் என்றழைக்கப்படுகின்றனர். சமயம் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை மூன்றும் தொடக்கமும் முடிவுமின்றி அழியாமல் இருப்பவை எனக் கூறுகிறது.

**"பதிபசு எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போல்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்,**
**பதி அணுகில் பசுபாசம் நிலாவே'**

இதனால் இச்சமயத்திற்கு "முப்பொருள் உண்மை" என்ற வேறுபெயரும் உள்ளது. சைவ நெறி,இறைநிலை எவ்வாறு இருக்கிறது என்று ஆராய்ந்தபோது, அது தூயவெளியாக எல்லையில்லாததாக மௌனமாக இருக்கிறது என்று கண்டனர். அரூபமான இறைநிலையே

அனைத்துத் தோற்றங்களின் உட்பொருளாக உள்ளது என்ற கருத்தில் எல்லோரிடத்தும் அன்பும் கருணையும் காட்டி யாருக்கும் துன்பம் செய்யாது வாழும் நெறியே சைவ சமயம் எனப்பட்டது.

இத்தகைய தூய உணர்வில் இருந்துகொண்டு தாவரத்தைத் தவிர்த்த எந்த உயிரினங்களையும் கொன்று உணவாகக்கொள்வதில்லை என்ற உயர் நோக்கில், மரக்கறி உணவை மட்டும் உட்கொள்ளும் வழக்கம் வந்தபோது அதுவே சைவ உணவு எனப் பெயர் பெற்றது.மக்கள் முதிர்ச்சியையும் நற்குணத்தையும் வளர்க்க உதவுவதை சமயம் நோக்கமாகக் கொண்டுள்ளது. சைவ சமயத்தின்படி, ஆணவம், அகங்காரம், கன்மம் போன்றவற்றால் உயிர்கள் துன்பங்களை அனுபவிக்கின்றன, ஆனால் இறைவனுடன் ஒரு தொடர்பை அடைவதன் மூலம் இந்த கஷ்டங்களை ஒருவர் கடக்க முடியும்.

சைவ சமய கருத்துக்களை தமிழ் மொழியில் சான்றோர்கள் பரப்பியதால் சிவ பக்தியோடு இணைந்து தமிழ் மொழியும் வளர்ச்சி பெற்றது.இந்து மதத்தின் உயிர்நாடியாகச் சைவ சமயம் விளங்குவது போல சைவ சமயத்தின் உயிர்நாடியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. எனவே சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்த தொடர்பு கொண்டவை.

**சைவ சமய திருமறைகளில் ஒன்றானது திருமந்திரம்**

திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என நான்கு வகையாக அமைந்துள்ளன. ஒன்று முதல் ஒன்பது வரையான திருமுறைகள் தோத்திர வகையையும், பத்தாவது திருமுறை சாத்திர வகையையும், பதினொன்றாவது திருமுறை பிரபந்த வகையையும், பன்னிரண்டாவது திருமுறை புராணவகையையும் சாரும். இத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமந்திரமாலை எனவும், தமிழ் மூவாயிரம் எனவும் வழங்கும் திருமந்திரம்

நம்மை உலகத்துடனும்,பிறருடனும் உடம்புடனும், இறைவனுடனும் தொடர்பு படுத்துவது மந்திரமாகும்.உயிர்களுக்கு வேண்டிய அமைதி நிலையை உணர்த்தவல்ல மந்திரமாக நமக்கு அருளப்பட்டிருக்கிறது 10வது திருமுறையான திருமந்திரம்.

இது நாற்சீர் அடிகொண்ட கலி வகை யாப்பால் ஆனது. இந்நூல் ஒன்பது பகுதிகளும் 195 உள் தலைப்புகளும் கொண்டுள்ளது. இவை தந்திரம், மந்திரம், அறிவுரை என்ற இயல்களாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தந்திரத்திலும் உலக வாழ்க்கை குறித்தும் சைவச் சமய நெறிகள் குறித்தும் சைவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் போதிக்கின்றார். இந்த ஒன்பது தந்திரங்களும் 28 ஆகமங்களின் சாரமாகத் திகழ்வது இதன் சிறப்பு.திருமந்திரத்தில் உள்ள வசனங்கள் ஒரு விதிவிலக்கான அமைப்பைக் கொண்டிருக்கின்றன மற்றும் ஒவ்வொரு வரியும் 11 - 12 எழுத்துக்களைக் கொண்டுள்ளது, இது முதல் எழுத்தைப் பொறுத்தது.

தமிழகத்தின் முதல் சாத்திர நூல் திருமந்திரமாகும். திருமூலர் திருவாவடுதுறையில் தங்கி மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாகப் பாடியதாகக் கூறுவர்.இதனை கீழ்க்கண்ட வரிகளில் அறியலாம்.

**"மூலம் உரைசெய் மூவாயிரம் தமிழ்" (திருமந்திரம்:99)**

**"தமிழ் மூவாயிரம் முத்தி முடிவிது மூவாயிரத்திலே" (திருமந்திரம்:100)**

பிற மைய தத்துவங்கள்

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவன்"**

**"யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்"**

**"அன்பே சிவம்".** ஆகும்.

**<u>தமிழ் செய்யப் பிறந்தவர் திருமூலர்</u>**

திருமந்திரத்தில் குருமட வரலாறு என்னும் பகுதியில்.

**"வந்த மடமேழும் மன்னுஞ்சன் மார்க்கத்தின் முந்தி**

**உதிக்கின்ற மூலன் மடவரை...."**

என்று கூறப்படுகின்றது. இதனால், கயிலாய பரம்பரையில் வந்த ஏழு மடங்களில் முதலில் தோன்றியது மூலன் மடமெனவும் அங்கு திருமந்திர உபதேசம் நடைபெற்றதென்பதையும் அறிய முடிகின்றது.கைலையில் இவர் நாமம் சுத்தசைவநாதர் என்றும் சுந்தரநாதர் என்றும் அழைக்கப்பட்டார். தமிழில் ஞானத்தைப் பரப்ப இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திருமூலர்.திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் திருமூலரைப் பற்றிக் கூறும்போது

**"மற்றவர்தா மணிமாதி வருஞ் சித்தி பெற்றுடையார்"**

என்கின்றார்.இறைவனை குருவாகக் கொண்டவர் திருமூலர். இறைவனின் அருள் வேண்டி அவர் திருவடிகளில் சரணடைந்திருக்கும் எட்டு யோகிகளுள் ஒருவர் திருமூலர்,திருக்கயிலாயத்தில் வீற்றிருக்கும் சிவயோகி. இவர் தான் அறிந்தது போக, மேலும் எண்வகை சித்திகளையும், யோகங் களையும் கற்கும் பொருட்டு, தமிழகத்தின் பொதிகை மலையில் வாழ்ந்த அகத்தியரைத் தரிசிக்க வந்தார்.அந்த பயணத்தின்போது, வழியில் திருவாடுதுறைக்கு அருகில் சாத்தனூரில் பசுமாடுகள் மேய்க்கும் 'மூலன்' என்பவன் இறந்து கிடந்தான். அதனால் கலங்கி நின்ற பசுக்களின் கண்ணீரைத் தாங்காத சுந்தரநாதர், 'தன் உடலை மறைத்து, மூலன் உடலுக்குள் பிரவேசம் செய்தார். இதனை

**"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது**

**முன்னை நன்றாக முயல்தவஞ் செய்திலர்**

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**

**தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே". (-தி.10 பா.20)**

மூலமாக அறியலாம்.பசுக்கள் மகிழ்வில் ஆனந்தக் கண்ணீர் விட்டன. மூலனின் மனைவி இவரைத் தன் கணவன் என்று கருதி நெருங்கியபொழுது, 'எனக்கு உன்னோடு உறவு இல்லை' என்றும் உடல் மட்டுமே அவள் கணவனுடையது என்றும் இவர் கூடு விட்டு கூடு பாய்ந்ததைப் பற்றிக் கூறிவிட்டு, தன் உடலைத் தேடி சென்றார்.இறைவன் அதனை வேண்டும் என்றே மறைத்தருளினார்.இறைவனின் ஆணையை ஏற்று மூலனின் உடல் மூலமாக வேதங்களையும், ஆகமங்களையும் தமிழில் தொகுக்க முடிவெடுத்தார்.தனதுடல் மறைந்ததும் சித்தில் வல்லவராகிய அச் சித்தரால், தனக்கென வனப்பும்

வலிமையுமுள்ள ஒருடலைப் படைத்திருக்க முடியும். ஆனாலும் அவர் அப்படிச் செய்யவில்லை. அதற்குரிய காரணத்தை,

**"தண்ணிலவார் சடையார்தாந் தந்தவா கமப்பொருளை**

**மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ்வகுப்பக்**

**கண்ணியவத் திருவருளா லவ்வுடலைக் கரப்பிக்க எண்ணிறந்த வுணர்வுடையா ரீசரருளென வுணர்ந்தார்"**

என்று கூறுகின்றார் சேக்கிழார்.திருவாவடுதுறை கோயிலில் போதிமர மாகிய அரசமரத்தின் கீழ், ஐம்புலனை அடக்கி தவநெறியில் யோகியாக அமர்ந்தார் மூலனாகிய சுந்தரநாதர். 'தவராஜயோகி' ஆகி மவுனம் காத்தார்.

ஒரு வருடம் தவமிருந்து ஒரு பாடலைப் பாடுவார்,மீண்டும் தவத்தில் மூழ்குவார். ஒருவருடம் முடிந்ததும் தவத்தால் தாம் பெற்ற அனுபவத்தை ஒரு பாடலாகப் பாடுவார். அப்படி மூவாயிரம் ஆண்டுகள் தவமியற்றி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார்கள் திருமூல நாயனார். மேலும்

**'தன்னை நன்றாகத் தமிழ் செய்ய**

**என்னை நன்றாக இறைவன் படைத்தான்'**

என்று தன் வாழ்வின் நோக்கத்தை அறிவித்தார்.

**தமிழ் மொழிக்கு திருமந்திரத்தின் தொண்டு**

**"அகாரம் முதலாக ஐம்பத்தொன் றாகி உகாரம் முதலாக ஓங்கி உதித்து மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி நகார முதலாகும் நந்திதன் நாமமே"**

தொடக்கத்தில் தமிழ் மொழியில் ஐம்பத்தொரு ஒலிகள் இருந்தன என்பதை முதன்மையாக கூறிய நூல் திருமந்திரமாகும்.நாளடைவில் அவை ஐம்பத்தொன்றும் புணர்ந்து முப்பத்தி மூன்றாக ஆனது.பின் அரிய மற்றும் அறியா ஒலிகளை உணர்த்தவும்,ஓர் தனியெழுத்து மிக சிறப்பாக அமைய வேண்டும் என 'ஃ' என்னும் தனித்துவம் பொருந்திய சொல்லை சித்தரித்தார் திருமூலர்.தமிழும் சிவனும் பிரியா என்னும் அடிப்படையில், 'ஃ' இன் மூன்று புள்ளிகளும் சிவனின் மூன்று கண்களான சூரியன், சந்திரன், நெருப்பு ஆகும் என்றும்,இவை மூன்றும் எவ்வாறு உலக குறைபாடுகளை நீக்குவதுப்போல், 'ஃ' இல் இருக்கும் சிவனின் கண்களாக கருதப்படும் மூன்று புள்ளிகளும் அனைத்து ஒலி குறைபாடுகளை நீக்கி மொழி செழுமைக்கு வழிவகுக்கும் என்று கருதி,ஃ என்ற எழுத்தை வடிவமைத்தார்.

சதாசிவன் வடமொழியில் 28 ஆகமங்களை உபதேசித்தார். அவற்றில் காலத்திற்கு தேவையான காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம் என்னும் 9 வடமொழி ஆகமங்களை தமிழாக்கி எளிதாக்கித் தந்தார்.

திருமூலர் இயற்றுவதற்கு முன் தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் சைவ சித்தாந்த நூல் இல்லை, அவர் செய்த திருமந்திரமே சைவ சித்தாந்த முதல் நூல் என்பது தெளிவு. ஆதலின் இந்நூல் பின் வந்த அப்பர், சம்பந்தர் ,சுந்தரர் முதலிய சமயாசாரியர்கட்கும் அவர்களால் பரப்பப்பட்ட சைவ சமயத்திற்கும் ஆதார நூலாயிற்று. அவர்கள் திருமந்திரத்தை நன்கு படித்தவர்கள்.

**திருமூலரும் தமிழ் வளர்ச்சியும்**

திருமூலர் தாம் பெற்ற இன்பம் என்று கருதியது மெய்யுணர்வையே. அந்த மெய்யுணர்வைத்தன் மண்ணுக்குரிய மக்களுக்குத் தன் தாய்த் தமிழிலேயே வழங்கி ஆற்றுப்படுத்தினார்.

திருமூலர் வடமொழி அறிந்தவர். இந்நிலையில் சமயம் தொடர்பான ஒரு நூலை அவர் நன்கறிந்து செல்வாக்குப் பெற்ற மொழியான வடமொழியிலேயே வெளிப்படுத்தியிருக்கலாம். அக்காலகட்டத்தில் அது ஒன்றும் புதிய வழக்கமும் அன்று. திருமூலர் காலத்துக்குப்பின் தமிழ் ஓங்கி நின்ற காலத்தில் தமிழர்களாய்த் தோன்றிய சங்கரரும் இராமனுசரும்கூடத் தங்கள் நூல்களை வடமொழியிலேயே செய்தனர் என்றாலும் திருமூலர் **தான் பெற்ற இன்பத்தைத் தமிழிலேயே வழங்க விழைந்தார்.** தான் உயிர்பெற்று ஊதியம் பெற்றதே இறைவனைத் தமிழில் செய்வ தற்குத்தான் என்னும் கருத்துப்பட 'என்னை நன்றாக இறைவன் படைத் தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று பாடுகிறார் (திருமந் 81).

திருமூலர் காலத்தில் சமயத் துறையில் இன்றைக்கு இருப்பது போலவே அன்றைக்கும் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இடையே போட்டி உணர்வு இருந்ததாகவும் அப்போட்டியில் வடமொழிக்கு முதன்மை வழங்கப்பட்டதாகவும் திருமந்திரப் பாடல் வரிகளிலிருந்து ஊகிக்க முடிகிறது. அந்தப் போட்டியுணர்வைத் தவிர்த்து இரண்டு மொழிகளுக்கும் சம இடம் வழங்கவே,

ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணை செய்தானே ( திருமந் 65)
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே ( திருமந் 66) என்றுரைத்தார்.

எந்த ஒன்றும் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் மக்களின் மொழியில் சுமந்து செல்லப்படவேண்டும். . அவ்வாறே தாய்மொழி என்பதற்காக மட்டுமன்றிப் 'பேரின்ப வீடு என்ற செய்தியை மக்களுக்குச் சுமந்து செல்வதற்காகவும் திருமூலர் தமிழை நாடியதில் வியப்பே இல்லை. திருமூலர் பாசாங்குகள் அற்றவர்.

**திருமந்திரம் உணர்த்தும் சமய கோட்பாடுகள்**

| **தந்திரம்** | **உள்ளடக்கம்** |
|---|---|
| முதல் | உபதேசம், யாக்கை நிலையாமை, கொல்லாமை,கல்வி, கள்ளுண்ணாமை |
| இரண்டு | சிவனின் எட்டுவகை வீரச் செயல்கள்,ஐந்தொழில்கள்; சிவனையும், குருவையும் நிந்திப்பதால் வரும் துன்பங்கள் |
| மூன்று | யோகத்தைப் பற்றிப் பேசுகின்றது. எண் வகை யோகக் கலைகள் இங்கு விளக்கப்படுகின்றன. |
| நான்கு | திரு அம்பலச் சக்கரம், நவகுண்டம், வயிரவ மந்திரம் |

| | |
|---|---|
| ஐந்து | இறைவனை அடைவதற்கு உரிய நூல் நெறிகள்: சரியை, கிரியை, யோகம், ஞானம், சத்தி நிபாதம் |
| ஆறு | குருதரிசனப் பயன், திருநீற்றின் சிறப்பு, துறவு நிலை |
| ஏழு | ஆறு ஆதாரங்கள், சிவபூசை, குருபூசை, சமாதி அமைத்து வழிபடும் முறை, உயிர் இலக்கணம் |
| எட்டு | பக்திநிலை, முக்திநிலை |
| ஒன்பது | நுண்பொருள் விளக்கம் (சூனியசம்பாஷணை) |

- வேதாந்த வகைகளான நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் போன்ற ஆறுவகையான முறைகள் திருமந்திரத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.
- அறுவகைச் சித்தாந்தம் பாசுபதம், மாவிரதம், காபாலம், வா*மம், பைரவம், சைவம் என்பன சைவத்தின் உட்பிரிவுகளாகும்.
- திருமூலர் காலத்துச் சைவம் (1) சுத்த சைவம், (2) அசுத்த சைவம், (3) மார்க்க சைவம், (4) கடுஞ் சுத்த சைவம் என நால்வகைப்பட்டது. இப்பிரிவு பிற்காலச் சைவ சித்தாந்த சாத்திரங்களில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

**ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் வழங்கும் திருமந்திரம்**

திருமந்திரம் தமிழழைக் கருவியாகக் கொண்டு உலகுக்கு ஞானத்தை வழங்கியது

திருமந்திரம் இறைவனைப் பற்றியும், இறைவனின் அருள் புரிதல் பற்றியும், உலகின் இயக்கம் பற்றியும், பிறவிகளை உடைத்து இறைவனுடன் இணைதல் பற்றியும் மட்டுமல்லாமல் நான்கு வேதங்களின் ஞானத்தை தொகுத்து தமிழில் வழங்கிய பெருமை கொண்டது.

திருமூலர் ஆன்மீக முன்னேற்றத்தின் நான்கு படிகளான சார்யா,க்ரியா,யோகா மற்றும்

ஞான இவற்றை விளக்குகிறார்.வாழ்க்கையின் மூலக்கூறுகள் கிரியை,யோகம்,ஞானம் ஆகும். சரியை என்ற ஒழுக்கத்துடனும், கிரியை என்ற அர்ப்பணத்துடனும், யோகம் என்பது பொருந்தி இருந்தால்,ஞானம் என்ற அருளால் இறைவுணர்தலை அடையலாம் என சைவ சித்தாந்தம் வழி கோலுகிறது. அதாவது சரியையும்,கிரியையும் கொண்டுவந்த யோகத்தால் ஞானத்தை எட்ட முடிகிறது. பிறவியுற்று உலகியலில் வாழ்ந்து, விருப்புவெருப்புகளைக் கடந்து இறைவனை உணர்ந்து அடைதலே சைவ சித்தாந்தம்.

நம்மால் ஞானியர் போன்று பாவபுண்ணியங்களைக் கடக்க இயலா விட்டாலும், பாவங்கள் செய்வதையாவது தவிர்ப்போம். இயன்றவரையிலும் தான-தருமங்கள் செய்து, ஞானநூல்கள் காட்டும் அறவழியில் வாழ்வோம். அப்போது நம் மனவளமும் வாழ்க்கையும் சிறக்கும்.இந்நூல் வாழும் முறைகளையும், வாழ வேண்டிய முறைகளையும் எடுத்துக்கூறுகிறது. அதாவது அக-புற அறவழி கற்பதும், அருள்வழி நடப்பதும், அன்பினால் அறிவிப்பதும், இறையை உணர்ந்து இயல்பாக வாழ்தலும் எங்ஙனம் என உணர்த்துகிறது. திருமூலரின் திருமந்திரத்தின்வழி உள்ள யோகம், தன்னைத்

தானறிந்து, எது நினைக்கின்றோமோ அதுவாகவே ஆகி, தன்னை, உலகை, இறையை ஐக்கியமாக்கும் உள்வலிமைக்கான பயிற்சியைத் தருகிறது.

ஆன்மீகமும் அறிவியலும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன, ஏனெனில் அவை இரண்டும் உலகத்தைப் பற்றிய நமது புரிதலுக்கு பங்களிக்கின்றன. அவர் தனது ஆன்மீக நம்பிக்கைகள் மூலம் பெற்ற அறிவியல் கருத்துக்களை இணைத்தார். ஆன்மீகத்திற்கும் அறிவியலுக்கும் இடையிலான இந்த தொடர்பை பல்வேறு குறிப்பிடத்தக்க அறிவியல் நிகழ்வுகளில் காணலாம், குறிப்பாக மருத்துவ முன்னேற்றங்கள் தொடர்பாக. கூடுதலாக, அவர் 41 பாடல்களை திருமந்திரத்தின் இரண்டாவது தந்திரத்தில் 'கரு உற்பத்தி' என்ற தலைப்பில் இயற்றினார், இது சமகால குழந்தை பிறப்பு செயல்முறையை ஆராய்கிறது. திருமூலரின் உபதேசம் 481ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளபடி, சேர்க்கையின் போது பெண்ணின் வயிற்றில் மலம் நிரம்பினால், அது மந்தமான பிரசவம் ஆகும். அதேபோல, தேங்கி நிற்கும் சிறுநீர் ஒரு குழந்தை ஊமையாக பிறக்க வழிவகுக்கும், மேலும் இரண்டு நிலைகளும் இருந்தால், குழந்தை பார்வையற்றதாக பிறக்கலாம். எனவே, திருமணத்தின் போது தூய்மை மற்றும் நேர்மறை எண்ணங்களின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார், ஏனெனில் அவை ஆரோக்கியமான குழந்தையின் பிறப்புக்கு பங்களிக்கின்றன.

**சைவ நூலான திருமந்திரம் பக்தி இயக்கம் மற்றும் பிற தமிழ் சமைய நூல்களின் முன்னோடி**

பக்தி இயக்கத்தினைத் தமிழகத்தில் தோற்றுவித்தது திருமூலரேயாவார். அன்பு, பக்தி, எளிமை போன்ற வழிபாட்டு முறைகளை முதன் முதலாய்த் தமிழகத்திற்கு அவரே போதித்தார். தமிழில் இவரது நூலே முதன் முதலாய் பாமரரும் புரிந்து கொள்ளும் எளிய நடையில் காணப்பட்டது. அவரின் வழிபாட்டு முறையைக் கீழ்க்கண்ட பாடல் நன்குணர்த்தும்.

திருமந்திரமே இந்நாயன்மார்களுக்கு சான்று நூலாகத் திகழ்ந்தது.

இந்நூலை நன்கு கற்றுணர்ந்த இந்நாயன்மார்கள் தம்முடைய பாடல்களில் அவற்றைச் சிறப்புடன் கையாண்டுள்ளனர்.சில சான்றுகளைக் காண்போம்,

| **திருமந்திரம்** | **அதன் அடிப்படையில் உருவானது** |
|---|---|
| “இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும் பதிவித்த பாதம் பராபரநந்தி" (திருமந்திரம்:1596) | “நனந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார் நற்றவர்சேர் திருவடிஎன் தலைமேல் வைத்தார்” (அப்பர் தேவாரம். நல்லூர் பதிகம்:1-2) என்று நாவுக்கரசரும் உரைப்பார். |
| “எப்பரி சாயினும் ஏத்துமின் எத்தினால் அப்பரி சீசன் அருள்பெற லாமே" (திருமந்திரம்:36) | “எம்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும் அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளியும்” (திருவாசகம். கீர்த்தி திருவகவல்:125-26) |

| | |
|---|---|
| "வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே" (திருமந்திரம்:42) | "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்" (ஞானசம்பந்தர். கோளரு பதிகம்.செ:1) |
| "சீரார் பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்" (திருமந்திரம்:2960) | "சிவன வனென் சிந்தையுள் நின்ற அதனால்" திருவாசகம். சிவபுராணம். வரி:17) |

**முடிவுரை**

தமிழர்கள் சமயப்பற்று மிக்கவர்கள். சமயங்களில் சிறந்தது சைவம். இதற்குச் சான்றாகத் தமிழில் தோன்றிய ஏராளமான ஆகம நூல்கள் யாவற்றிற்கும் மூலநூலாகத் திருமந்திரம் திகழ்ந்தது. சைவச் சமயத்திற்கு முழுமையான வடிவத்தைத் திருமூலர் கொடுத்தருளினார்.தமிழகத்தில் தோன்றிய மிகப் பெரிய சமயப் பெரியார்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.அவர் வகுத்தளித்த கருத்துகளை வழியாகக் கொண்டே இப்பெரியோர்கள் சைவசமயக் கோட்பாடுகளைத் தமிழகத்தில் நிலைநாட்டவும் சமயத் தொண்டு புரியவும் செய்தனர்.வணக்கத்திற்குரிய மகான்கள் சைவத்தின் கொள்கைகளை மொழியறிவுமிக்க தமிழ் மொழியில் பரப்பியதால், தமிழ் மொழி சிவன் மீதுள்ள ஆழ்ந்த பக்தியுடன் கைகோர்த்து வளர்ந்தது. சைவ சமயம் இந்து மதத்தின் சாரமாகச் செயல்படுவதைப் போலவே, தமிழ் மொழியும் சைவத்தின் முக்கிய சாரமாக நிற்கிறது. இவ்வாறு சைவமும் தமிழும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பது மறுக்க முடியாதது.

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியில் இருக்கக்கூடிய இதுவரை அறியப்படாத புதிய கருத்துக்களை புதிய செய்திகளை புதிய சிந்தனைகளை உலகிற்கு வழங்குவது.அந்த வகையில் தமிழ் மொழியில் இல்லாத பல புதிய சிந்தனைகளைத் திருமமூலர் தம் நூல்களில் கொண்டு வந்திருக்கிறார். இதன் மூலம் தமிழ் செழுமை பெற்றது. தமிழ் மூலம் தனது கருத்துக்களைச் சொல்ல முடியும் என நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.புதிய புதிய சிந்தனைகளுக்கு முன்னோடியாக இவர் தமது திருமந்திரத்தை அமைத்திருப்பது தமிழ் வளர்ச்சிக்கு இவர் செய்த அரும் பணியாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. அருணாசலம்.ப, (2002), திருமந்திரக் கோட்பாடு, சென்னை. முல்லை நிலையம்.

2. சக்திவேல் முருகன்.மு.பெ.(2003), திருமந்திரச் சிந்தனைகள், சென்னை: உமா பதிப்பகம்.

3. இராமநாதப் பிள்ளை, (1957), திருமூலரின் திருமந்திரம், திருநெல்வேலி: சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

4. சிதம்பரநாதன்.அ, (1942), திருமந்திரம் மூவாயிரம், சென்னை: சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

5. சுடலி தியாகராஜன், (2009), பண்பாட்டு பார்வையில் திருமந்திரம், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

6.மகாலட்சுமி.தி, (2014), திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.